2014 பிப்ரவரி 1]

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு காகித அட்டை தொழிற்சாலை முழுத் திறனுடன் நிறுவப்பட்டு, இலாபகரமாக இயங்க நாளொன்றுக்கு 660 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்டதாக இருக்கவேண்டும். ஆண்டுக்கு 2 இலட்சம் டன் காகித அட்டை அலகு உற்பத்தி செய்ய பின்வரும் வசதிகள் தேவைப்படும்:*

ஆயிரம் ஏக்கர் நிலம் வேண்டும்; தண்ணீர் உபயோகம் 25 ஆயிரம் கனமீட்டர் வேண்டும்; 2 இலட்சத்து 60 ஆயிரம் டன் கரும்புச் சக்கை ஆண்டொன்றுக்குத் தேவை; 1 இலட்சத்து 60 ஆயிரம் மெட்ரிக் டன் மரக்கூழ் ஆண்டொன்றுக்குத் தேவை; 31 ஆயிரம் டன் உபயோகப்படுத்தப்பட்ட காகிதம் ஆண்டொன்றுக்குத் தேவை; 80 ஆயிரம் மெட்ரிக் டன் இறக்குமதி செய்யப்படும் பல்வேறு வகையான மரக்கூழ்கள் தேவை. மூலப்பொருள்கள் கிடைப்பது அரிதாக இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதியிலே தொழிற்சாலையை நிறுவுவது கடினமாக இருக்கும். இருந்தாலும், தொழில் முனைவோர் முன்வருவார்களேயானால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

25—

கைத்தறிக் குழுமம்

***10252—திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை பகுதியில் கைத்தறிக் குழுமம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை பகுதியில், ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பாளையங்கோட்டை கைத்தறி வளர்ச்சிக் குழுமத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, மூன்றாண்டுக் காலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், விருதுநகர் கைத்தறி பெருங்குழுமத் திட்டத்தின்கீழ், திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை பகுதியில் கைத்தறி நெசவாளர்கள் பயன்பெறுகின்றனர். எனவே, திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை பகுதியில் மேலும் ஒரு கைத்தறிக் குழுமம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.*

திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. அந்த பதிலிலேயே நான் கேட்கவிருந்த கேள்விகள் எல்லாம் அடங்கியிருப்பதால், என்னுடைய கருத்துகளை மட்டும் தெரிவித்து, அதை மேம்படுத்த முடியுமா என அறிய விரும்புகிறேன்.*

திருநெல்வேலி மாவட்டத்தில் பின்வரும் கிராமங்கள், நகரங்களில் நெசவாளர்கள் அதிகமாக வசித்து வருகிறார்கள். சங்கரன்கோவில், சுப்புலாபுரம், புளியங்குடி, தென்காசி, கீழப்பாவூர், புதுக்குடி, வீரவநல்லூர், வெள்ளன்குளி, கல்லிடைக்குறிச்சி, அம்பாசமுத்திரம், பாளையங்கோட்டை ஆகிய பகுதிகளில் கைத்தறி நெசவுத் தொழில்மூலம் குறைந்த வருமானம் கிடைப்பதாலும், ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு இல்லாத நிலை ஏற்படுவதாலும், அவர்கள் வேலைவாய்ப்பினைத் தேடி திருப்பூர், ஈரோடு, கோயம்புத்தூர் போன்ற தொழில் நகரங்களுக்குச் செல்கிறார்கள். இதன் விளைவாக, திருநெல்வேலி மாவட்டத்தில் கைத்தறித் தொழில் நலிவடைந்து வருகிறது. எனவே, இந்நிலையைத் தவிர்த்து, நெசவுத் தொழிலை ஊக்குவிக்க மேலும் அதிக நிதியுதவியைச் செய்து, அந்தக் குழுமத்தை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா என தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

2014 பிப்ரவரி 1]

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர்களின் முன்னேற்றத்திற்காகவும், கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காகவும் மற்றும் கைத்தறித் துறையின் வளர்ச்சிக்காகவும் மக்களின் இரசனைக்கேற்றவாறு புதிய, புதிய வடிவமைப்புகளுடன் உற்பத்தி செய்து, சந்தைப் போட்டியில் கலந்துகொண்டு, விற்பனையை அதிகப்படுத்தி, வியாபார நுணுக்கங்களை அறிந்துகொள்கின்ற வகையில், கைத்தறிக் குழுமம் தமிழகத்திலுள்ள நெசவாளர்களின் திறமையை 7 level–களின் அடிப்படையில் 58 குழுக்களாகப் பிரித்து, சிறப்பான முறையில் நெசவாளர்களுக்குப் பயன்பட்டு வந்து கொண்டிருக்கிறது.

முற்பகல் 10—55

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் கைத்தறிக் குழுமத்தின் சார்பில் பாளையங்கோட்டை, கிருஷ்ணாபுரம் மற்றும் பாபர்குளம் கிராமங்களில் 1,660 சதுர அடியில் 22,80,000 ரூபாய் செலவில் பொது வசதி மையம் அமைக்கப்பட்டு நெசவாளர்களின் வசதிக்காக பாவு ஓட்டுதல், கஞ்சி தேய்த்தல் மற்றும் சாயமிடுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி நெசவாளர்களின் பொற்காலமாகத் திகழ்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ரூபாய் 260 கோடியில் பத்தாயிரம் பசுமை வீடுகள் என்று, இந்தியாவிலேயே முதன்முறையாக நெசவாளர்களுக்கு தறியுடன்கூடிய வீடுகள் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் இந்தியாவிற்கே வழிகாட்டக்கூடிய முன்னோடி மாநிலமாக தமிழகம் சிறப்பான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நெசவாளர்களுக்கு தறி உபகரணங்கள் மற்றும் ஜக்கார்பெட்டி கொடுத்து, சாயப் பயிற்சி மற்றும் ஆடை வடிவமைப்பு ஆகிய பயிற்சிகள் கொடுத்து, தறி மேம்பாட்டிற்காக நிதி கொடுத்து, பெடல் தறி கொடுத்து, சிறப்பான முறையில் வீடு கட்டிக் கொடுத்து, அவர்களின் மறுவாழ்விற்கு நிதி ஒதுக்கிக் கொடுத்து, நெசவாளர்களுடைய நலனில் அக்கறை கொண்டு, சிறப்பான முறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களின்

அரசு அவர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலை கொடுப்பதற்காக விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தையும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் பெறும் குறைந்த வருமானத்தை அதிகப்படுத்துவதற்காக இன்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தறியுடன்கூடிய வீடு கட்டிக் கொடுத்துள்ளது. பெடல் தறி போன்ற பல்வேறு நவீன உபகரணங்களையும் வழங்கி, அவர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கி, கை ராட்டையில் சுற்றுவதற்குப் பதிலாக மின் ராட்டையை வழங்கிக் கொண்டிருக்கிறது. நெசவாளர்கள்மீது அக்கறை கொண்டு, அவர்களுக்கு ஆண்டு முழுவதும் வருமானம் கிடைப்பதற்கு வழிவகை செய்துள்ளது என்பதை பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரின் நீண்ட விளக்கம் மிக்க மகிழ்ச்சியை அளிக்கிறது. அம்மாவின் ஆட்சியில் என்ன நடக்கிறது என்று அனைவருக்கும் தெரிய வேண்டும் என்பதற்காகவே இந்தக் கேள்வியைக் கேட்டேன். ஏனென்றால், சிலர் வெளியே இருந்துகொண்டு, இங்கு என்ன இருக்கிறது, என்ன நடக்கிறது என்று தெரியாமல், அரசியல் நடத்துவதால், அவர்கள் அனைவருக்கும் தெரியவேண்டும் என்பதற்காக இந்தக் கேள்வியைக் கேட்டேன். அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

26—

இலவச வீடுகள்

***22669—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—